FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8318736

1. District மாவட்டம் திருவிழாம்பூர் PS காவல்நிலையம் அரசு கூட்டுறவு Year ஆண்டு 2023 FIR No முத-அ எண் 16 Date நாள் 12/12/23

2. (i) Act சட்டம் Revision of Exemption Act - 1988 (Amendment 2019) Sections பிரிவுகள் 7(b)
(ii) Act சட்டம் Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 12/12/23 Date to நாள் வரை
Time Period நேர அளவு Time from நேரம் முதல் 9hrs 10.00hrs Time to நேரம் வரை
(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12/12/23 Time நேரம் 06:30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written (in person)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 5Km தொலைவு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o the Regional Transport Office, (West) Tiruchirappalli, Trichy.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பழனியப்பன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1952 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் அரசு ஊழியர் (ஓய்வு) (g) Address : முகவரி எண்: 9/478, சிவபுரம் நகர், [illegible], திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. மணிபாரதி, RTO - Grade-II, O/o RTO (West), Trichy.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- இல்லை -

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விபரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court 12-12-25
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் .....
Rank நிலை ..... No எண் .....

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.16/2025-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 12.12.2025 பணியில் இருந்த போது காலை 06.30 மணியளவில் திருச்சி மாவட்டம், குண்டூர், அய்யனார் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் முருக கவுண்டர் மகன் திரு.எம்.பழனியப்பன் என்பவர் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மேற்கு, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2ஆக பணிபுரியும் திரு.மணிபாரதி மற்றும் புகார்தாரர் திரு.எம்.பழனியப்பன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 12.12.2025 காலை 07.45 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.16/2025, சட்டப்பிரிவு 7 (b) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 12.12.25 அனுப்புநர் எம்.பழனியப்பன் வயது 72/25, த/பெ.முருக கவுண்டர், எண்.9/494, அய்யனார் நகர், குண்டூர், திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சிராப்பள்ளி. ஐயா, நான் 11ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன், மேற்சொன்ன விலாசத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 1970 ஆண்டு முதல் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து 1984 ஆண்டு ஓய்வு பெற்றுவிட்டேன். ஓய்வு பெற்ற முதல் எக்ஸ் சர்வீஸ்மேன் என்ற பெயரில் டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறேன். என்னுடைய டிரைவிங் ஸ்கூல் திருச்சி ஐங்சனில் உள்ளது. எனது டிரைவிங் ஸ்கூல் மூலம் பொது மக்களுக்கு லைசன்ஸ் எடுத்து கொடுப்பது, LLR எடுத்து கொடுப்பது மற்றும் எனது டிரைவிங் ஸ்கூல் மூலம் பொது மக்களுக்கு ஓட்டுனர் பயிற்சி கொடுப்பது போன்றவைகள் செய்து வருகிறேன். திருச்சி, கல்லுகுழி, இராமானுஜம் தெருவில் வசித்து வரும் அனீஸ் என்பவரின் மனைவி ரம்யா என்பவர் போன வாரம் என்னுடைய டிரைவிங் ஸ்கூலுக்கு வந்து என்னை பார்த்து அவருக்கு இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் அதற்கு LLR எடுத்து கொடுங்கள் என்று என்னிடம் கூறினார். அதேபோல் திருச்சி, கருமண்டபத்தில் உள்ள அக்பர்அலி என்பவரது மகன் பையாஸ் என்பவரும் இரண்டு சக்கரம் வாகனம் ஓட்டுவதற்காக LLR எடுத்து கொடுங்கள் என்று என்னிடம் கூறினார். நான் அதற்கு தேவையான ரெக்காட்டுகள் எடுத்து கொண்டு 8.12.25 தேதி வாருங்கள் என்று கூறி

அனுப்பிவிட்டேன். அவர்கள் இருவரும் 8.12.25 தேதி திங்கள்கிழமை வந்து LLR போடுவதற்கு தேவையான ரெக்கார்ட்ஸ் உடன் எனது டிரைவிங் ஸ்கூலுக்கு வந்து என்னை பார்த்தார்கள். அன்றே அவர்களுக்கு ஆன்லைன் மூலம் LLR போடுவதற்கு அப்ளை செய்து விட்டு, அவர்கள் இருவருக்கும் LLR போட 10.12.25 தேதிக்கு திருச்சி மேற்கு RTO ஆபீஸில் அப்பாய்மெண்ட வாங்கினேன். மீண்டும் அவர்கள் இருவரையும் 10.12.25 தேதி திருச்சி மேற்கு RTO ஆபீஸிற்கு காலை சுமார் 10 மணிக்கு வர சொல்லி எம்.வீ.ஐ மணிபாரதியை பார்த்து இருவரின் application கொடுத்தேன். எம்.வீ.ஐ மணிபாரதி அவர்கள் இருவரின் applicationஐ சரிபார்த்துவிட்டு கையெழுத்து போட்டார். பின்னர் அவர்கள் இருவரும் வெளியே சென்றபின் எம்.வீ.ஐ மணிபாரதி என்னிடம் அவர்கள் இருவருக்கும் LLR approval பண்ணிவிட்டேன். அதனால அவர்கள் இருவரிடமிருந்து தலா ரூ.500 வீதம் ரூ.1000 இரண்டு நாள்ல வாங்கி கொடுத்துடுங்க. அவர்கள் தரவில்லை என்றால் லைசன்ஸ்க்கு என்னிடம் வரவேண்டும். அவர்கள் இருவருக்கும் லைசன்ஸ் கிடைக்க விட மாட்டேன் என்று கறராக கூறினார். நானும் சரி என்று கூறிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். 11.12.25 தேதி ரம்யா மற்றும் பையாஸையும் எனது டிரைவிங் ஸ்கூலுக்கு வர சொல்லி அவர்களிடம் எம்.வீ.ஐ மணிபாரதி பணம் கேட்பதை பற்றி கூறி அவர்கள் இருவரிடமும் ரூ.500 வீதம் ரூ.1000 கேட்டேன். அதற்கு ரம்யா மற்றும் பையாஸ் இருவரும் நம்முடைய பேப்பர்ஸ் சரியாக இருக்கும் போது ஏன் லஞ்சம் கொடுக்கவேண்டும் என்று கேட்டனர். மேலும் ரம்யா நான் இரயில்வே போலீசாக இருக்கிறேன் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்று கூறி லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் கொடுங்கள் என்று கூறினார்கள். எனக்கும் பேப்பர்ஸ் சரியாக இருந்ததால் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. ஆகவே ரம்யா மற்றும் பையாஸ் ஆகிய இருவருக்கும் LLR கொடுத்ததற்காக என்னிடம் ரூ.1000 லஞ்சம் கேட்ட எம்.வீ.ஐ மணிபாரதி மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (M.Palaniappan) 12/12/25 Sir, Submitted to the Hon'ble Principal District Judge, Trichy. Received the report at 06.30 hrs on 12/12/25 and made a confidential enquiry and registered a case in Trichy V&AC Cr.No.16/2025, u/s 7 (b) of the PC Act-1988 (as amended in 2018) at 07.45 hrs on 12/12/25. Sd.xxx 12/12/25 Insp., V&AC, Trichy.

12/12/25
(A. Ramesh Venkatesh)
Insp V&AC, Trichy.